★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் கெற் பீஸ்
பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, நிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

கடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 11 வெள்ளிக்கிழமை (28 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 337

அரசு-புலிகள் சமாதானப் பேச்சு இடை நிறுத்தமென அறிவிப்பு

4 அரசியல்வாதிகளின் இறுதிச் சடங்குகள் நேற்று

கொழும்பு, ஒக். 28

கிரான்பாஸில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட 4 அரசியல் வாதிகளின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றன.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வீரசிங்க மல்லிமாராச்சி, மாநகரசபை உறுப்பினர்களான விமலரட்ண பெர்னாண்டோ, கிறிஸ்ரி பெரேரா ஆகியோரின் இறுதிச் சடங்குகள் நேற்று மாலை கனத்தை பொது மயானத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் நடைபெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினரான ஜி.எம். பிரேமச்சந்திரனின் இறுதிச்சடங்கு மாவத்தகம சாமோதயமைதானத்தில் நடைபெற்றது (2-1)

குண்டுக்கு இரையான பலரின் சடலங்கள் கொழும்பு ஆஸ்பத்திரியில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றை மக்கள் பார்வையிட்டு அடையாளம் காட்டுகிறார்கள். (2)

எனினும் புனர்வாழ்வுப் பணி தொடரும் என்கிறார் பிரதமர் சந்திரிகா

கொழும்பு, ஒக்ரோபர் 28

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா நேற்று அறிவித்தார்.

எனினும் வடக்கில் புனர்வாழ்வுப் பணிகளை அரசாங்கம் தொடர்ந்து செய்யும் என்றும் பிரதமர் சொன்னார்.

காமினி திஸாநாயக்கா விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டார் என்பதற்குத் திட்டவட்டமான ஆதாரங்கள் இருந்தால், அரசாங்கம் சமாதான முயற்சிகளை மறுபரிசீலனை செய்ய நேரிடும் என்றும் பிரதமர் சொன்னார்.

காமினி திஸாநாயக்கா குண்டு வெடிப்பில் கொலை செய்யப்பட்ட பின்னர், பிரதமர் சந்திரிகா நேற்று மாலை முதற்தடவையாக பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை இறுபாயாவில் நடத்தினார்.

அப்போதே அவர் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

சந்திரிகா தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

காமினி திஸாநாயக்கா கடந்த ஞாயிறு இரவு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுடன் நான் ஆரம்பத்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் எதுவித தொடர்பும் இல்லை. காமினி திஸாநாயக்கா விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டார் என்பதற்கு திட்டவட்டமான ஆதாரங்கள் இருந்தால் எனது அரசு சமாதான முயற்சிகளை மறுபரி (3 ஆம் பக்கம் பார்க்க)

ஊரடங்கு நீக்கம்

நாடு முழுவதிலும் கடந்த சில தினங்களாக அமைதி நிலவுவதனால் இன்றிலிருந்து ஊரடங்குச் சட்டத்தை நீக்குவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது

இச்சேவை நேற்றிரவு 10 மணிக்கு அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவு இன்று அதிகாலை 4 மணியுடன் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. (இ-4)

காமினியின் கடைசி வணக்கம்!

கொழும்பு, ஒக். 28

சம்பவம் இடம்பெற்ற போது நானும் மேடையில் இருந்தேன். "ஹெல ஜாதிக அபிமானே (தேசிய அபிமானம்) என்ற பாடலை பாடுமாறு காமினி திஸாநாயக்கா கேட்டுக் கொண்டார். எல்லோரும் அந்தப் பாடலைச் சேர்ந்து பாடியவண்ணம் கைதட்டினோம்.

காமினி திஸாநாயக்காவும் கைதட்டியவாறு "கப உதா சலயக் வேவா" (கொலை வணக்கங்கள்) என்று கூறினார். அவ்வேளை துடரெரவ (4 ஆம் பக்கம் பார்க்க)

சமாதான முயற்சி தோற்றால் விரைவில் யுத்தம் மூலம் தீர்வு

கேணல் அனுருத்த ரூபவாஹினிக்கு பேட்டி

கொழும்பு, ஒக். 28

ஏதாவது ஒரு காரணத்தால் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காவிட்டால் முப்படைகளுக்கும் போதிய பலத்தை வழங்கி முப்படைகளினதும் ஒத்துழைப்புடன் வெகு விரைவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கை. ஆனால்— சமாதானப் பேச்சுக்கள் தற் போது தற்காலிகமாக இடை (4ஆம் பக்கம் பார்க்க)

மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசிடம் வற்புறுத்து

மாநாட்டில் தீர்மானம்

கொழும்பு, ஒக். 28

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும்படி, சமாதானத்தை விரும்பும் குடி மக்களையும் அமைப்புகளையும் உள்ளடக்கிய சமாதான சிறப்புச்செயலணி அரசாங்கத்திடம் வலியுறுத்தி உள்ளது.

இலங்கையின் அவசரமான முன்னுரிமை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழங்கப்பட்டு, பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அது கேட்டுள்ளது.

அண்மையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உருவான வாய்ப்புகளைத் தவறவிடக்கூடாது என்றும் — சமாதானத்தை விரும்பும் (3 ஆம் பக்கம் பார்க்க)

புதிய பொதுச் செயலாளர் தஹம் நாளை ராஜினாமா

'காமினி அத்துக்கோறள நியமனம்'

கொழும்பு, ஒக். 28

சில தினங்களுக்கு முன்பு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட திரு. தஹம் விமலசேன நாளை சனிக்கிழமை தமது பதவியை ராஜினாமாச் செய்கிறார்.

இத்தகவலை திரு. விமலசேனாவே வங்காதீப பிங்கள நாளிதழுக்கு வெளியிட்டார்.

புதிய பொதுச் செயலாளராக இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.க. எம்.பி. காமினி அத்துக்கோறள நியமிக்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஆ-6)

ஜனாதிபதித் தேர்தலில் இருந்து நிஹால் கலப்பதி வாபஸ்!

கொழும்பு, ஒக் 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகிக் கொள்ளுவதாக ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் வேட்பாளர், நிஹால் கலப்பதி அறிவித்திருக்கிறார்.

இவர் ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர் ஆவார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு அளித்த உறுதிமொழிக்கு அமைய, தமது கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்கு இணங்க தாம் தேர்தலில் இருந்து வாபஸ் பெறுவதாக திரு. நிகால்கலப்பதி நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக பொ. ஐ.மு. வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கா உறுதியளிப்பாராயின் தாம் பேட்டியில் இருந்து விலகத் தயாராக இருப்பதாக திரு. கலப்பதி முன்னர் அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (ஒ-

கொலையுண்ட ஐ.தே.க. பொதுச் செயலாளர் காமினி விஜேசேகராவின் சடலம் ஆஸ்பத்திரியில். (ஒ)

சிதறிய தலையை பொருத்தினர்

காமினியின் கொலை தொடர்பான கொலையாளியின் தலையென பொலீஸார் நம்பும் ஒரு சிதறிய தலையை அரசு மருத்துவர்கள் இப்போது பொருத்தியுள்ளனர்.

முகத்தில் வாயைச் சுற்றியுள்ள பகுதியும் மண்டை ஓட்டின் பகுதிகளும் கடுமையாக தீய்ந்து இருந்தாலும் பொருத்தப்பட்ட முகம் நன்றாக அடையாளங்காணக் கூடியதாக இருக்கிறது என்று பி.ப.லி. தெரிவித்தது

மாவட்ட விளையாட்டு விழா நாளையும் மறுதினமும்!

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். மாவட்ட விளையாட்டு அரங்குத்திக்குழு நடத்தும் விளையாட்டு விழா நாளையும் நாளை மறுதினமும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

விளையாட்டுவிழாவை ஒட்டிய தடகள போட்டிகள் இரு நாட்களிலும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

அதைத் தொடர்ந்து நாளை மாலை கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியவையும் இரவு மல்யுத்தப்போட்டி, கோழிச்சண்டைப்போட்டி ஆகியவையும் இடம்பெறும்.

நாளை மறுதினம் மாலை 4.00 மணி முதல் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடும்மீன் வி.க.அணியை எதிர்த்து (3 ஆம் பக்கம் பார்க்க)

கமினி அபேவிக்கிரமவின் மனைவியையும், திருமதி [illegible] பிரேமதாஸா காமினியின் மகனையும் படங்களில் காணக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

அடைவைக்க உகந்த சில்க்கி, பாபடிகல்ஸ், போலீஸ், சில்வர், பாமால், ஜாவாபன்டம் முட்டைகளும், ஒரு வாரக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. இல. 1, தவக்குமார் வீதி, மடத்தடி (தூபி அருகில்), சங்கத்தானை, சாவகச்சேரி. (33517)

சில்க்கி, பிறேசில், பாமால், பிறாமா, போலிஸ், சில்வர் சீ பிறைற், மணித்தாரா முட்டைகளாகவும், குஞ்சுகளாகவும் எப்போதும் பெற்றுக் கொள்ளலாம். T. ரவீந்திரன், நவாலி தெற்கு, மானிப்பாய். (7980)

பால் விற்பனைக்கு

இருநெல்வேலி, யாழ்ப்பாணம், கச்சேரி, கொழும்புத்துறை, நல்லூர், கோப்பாய், கோண்டாவில், தாவடி, கொக்குவில் ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வீட்டுக்கு நேரடியாக பால் விநியோகிக்கப்படும். தொடர்பு: பொது முகாமையாளர் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-9438)

பாலர் ஆசிரியராகலாம்

கடைசித் தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் பதிக. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33496)

மணிக்கூடுகள்

புதிய கடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு மட்டும் அவர்களின் பாவித்த கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்), கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மாவிப்பாய்வீதி, ஆனைக்கோட்டை. (சி-9514)

பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்புவிழா நாளை(சனி)முற்பகல் 8-30 மணிக்கு பாடசாலை அரங்கில் அதிபர் திரு. கா. தவராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் வலயம் – 11 கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர், யாழ்.கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலந்திரன், யாழ். இந்து அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் கல்வி வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த திரு அருண் மாஸ்ரர் ஆகியோர் கலந்து கொள்வர்

1993 ஆம் ஆண்டில் இங்கு கல்வி கற்ற ஆண்டு ஐந்து மாணவர்களையும் விழாவுக்கு வருகை தந்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

விக்னா

கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 95
EVENING CLASS
(செவ்; வியா.
4-00 — 6-00 மணி)
நடைபெறுகின்றன.

BY
S. K. பிரபாகரன்
[சி-9434]

பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்
குடும்பத்துடன் பார்த்து மகிழ

★ நெல்லியடி மகாத்மா,
★ சாவகச்சேரி தெய்வேந்திரா
ஆகிய திரையரங்குகளில்
அகன்ற வெண்திரையில்

நிதர்சனமும்,
கலை, பண்பாட்டுக்கழகமும்
இணைந்து உருவாக்கிய

திரு. பொ. தாசனின்

"இன்னும் ஒரு நாடு"

தினசரி 6-30 மணி
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30மணி
[சி-9345]

நீங்கா நினைவில் 31ஆம் நாள்

நன்றி நவிலல்

தோற்றம்:	மறைவு:
28	28
—	—
09	09
—	—
1944	1994

வேலணை மேற்கு
திருமதி
ஜெகதாம்பாள் பூபாலபுண்ணியசிங்கம்

அன்பின் பிறப்பிடமாய் வந்த எங்கள் அம்மாவே! எங்களை விட்டுப்போக எப்படி அம்மா மனம் வந்தது நாங்கள் ஆறாத்துயரில் வெந்து மடிகின்றோம் தாயே நின்று வழிகாட்டாது நெடுந்தூரம் சென்றதேனோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை புரட்டாதித் திங்கள் 12ஆம் நாள் புதன்கிழமை வேண்டுகின்றோம். 28-09-94 அன்று நடைபெற்ற எமது அன்னையின் இறுதிக் கிரியைகளில் கலந்து பல வழிவகைகளிலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவுத் துயரால் வாடும்;
- பிள்ளைகள்.

பொற்பதி றோட்,
கொக்குவில். (33543)

7ஆம் ஆண்டு

நினைவு கூருகிறோம்

மலர்வு:	இழப்பு:
30	28
—	—
12	10
—	—
1930	1987

அமரர்
அ. செ. அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய அரசாங்க எழுதுவினைஞர், யாழ்ப்பாணம்)

''மரித்தோர் உயிர்த்தெழுவார்களென விசுவாசிக்கிறோம்''

அன்பு மனைவி, மக்கள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமதி அந்தோனிப்பிள்ளை,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (33522)

பா/பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி
வருடாந்த
பரிசளிப்பு விழா - 1994

காலம்: 30 - 10 - 1994 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-30 மணி
இடம்: பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி, சித்தன்கேணி.
தலைவர்: செல்வி போ. கந்தசாமி (அதிபர்)
பிரதம விருந்தினர்: திரு. க. கந்தசாமி (கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயம் II)
சிறப்பு விருந்தினர்: திரு கோ. சி. வேலாயுதம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயம் II)
கௌரவ விருந்தினர்: திரு. க. அருள் (உதவிப் பொறுப்பாளர், தமிழீழக் கல்விக் கழகம், தமிழீழம்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், பழைய மாணவர்.
[33545]

டோஹா - கட்டார்
WALK - IN INTERVIEW

08 – 10 – 1994 உதயனில் வெளிவந்த எமது விளம்பரம் தொடர்பாக, அந்நாட்டு நிறுவனத்தின் பொறியியலாளர்கள் (Engineers) கார்த்திகை (November) 1ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்த வருகின்றார்கள்.

உடன் நேரில் வரவும்

		சம்பளம்
1.	உருக்குப் பொருத்துனர்கள் (Steel Fitters / Bar Benders)	— QR.700
2.	குழாய் பொருத்துனர்கள் (Pipe Fitters)	— QR.700
3.	மேசன் (Mason)	— QR.700
4.	தச்சுத் தொழிலாளர் – கட்டடம் (Shuttering Carpenters)	— QR.700

1 QR — S.L. RS. 13.85

பாஸ்போட், அத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும் விண்ணப்பத்துடன் நேரில் வரவும்

இலவச தங்குமிடம், மருத்துவ வசதி,
இலவச உணவு / உணவு அலவன்ஸ்,
விமான பிரயாணச் சீட்டு
என்பன வழங்கப்படும்.

(TRUST) ரஸ்ட்
ரெக்ரூட்மன்ட். சேர்விஸ்
பிறைவேட் லிமிட்டட்,
93, 1/1, சதாம் வீதி, கொழும்பு - 01
Labour Licence No. 549
S.L.B.F.F. அனுமதி இல. AL / 549 / 07 / 94
[7981]

1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பையா சுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

மலர்வு: 22 — 11 — 1924 உதிர்வு: 08 — 11 — 1993

திதி: 28 — 10 — 1994

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய் இருந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு என்றென்றும் எமது மனங்களில் நீங்காது நிலைத்து நிற்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன் மற்றும்
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.
(7685)

COMPUTER
கல்வி

BASIC LANGUAGE
4 MONTHS
ஆரம்பம்: **29-10-1994**
மணி 8-30

LOTUS 1-2-3
2 MONTHS
ஆரம்பம்: **03-11-1994**
மணி 2-30

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3RD CROSS STREET,
JAFFNA. (சி/9554)

INSTITUTION OF ENGINEERS, SRI LANKA CENTRE NORTHERN PROVINCE

ANNUAL GENERAL MEETING 1994/95

Date & Time: 29th. OCTOBER 1994 at 10-00a.m.
Venue: SELVANAYAGAM BLOCK, UNIVERSITY OF JAFFNA.

Members are kindly invited to be present.

ENG. S. RUTHIRALINGAM,
SECRETARY.

8, Nallur Cross Road,
Jaffna. (33542)

பச்சிலைப்பள்ளி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை

பதவி வெற்றிடம்

கணக்காளர்: 104/10

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடத்திற்குக் கிகக் கானும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

1. வயது
   23 க்கும் **40** க்குமிடைப்பட்டிருத்தல் வேண்டும். (சங்கத்தின் சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)
2. கல்வித் தகைமைகள்:
   (அ) கூட்டுறவு ஊழியர் 11-வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் அல்லது கணக்கு வைத்தல் அல்லது கணக்கு ஆய்வாளர் வேலையில் மூன்று (3) வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 12-வது சம்பளத் திட்டத்தில் க/கு புத்தகம் பேணுதல், க/கு ஆய்வாளர் வேலையில் (6) ஆறு வருட அனுபவம்.

   அல்லது

   (ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், பரீட்சை இறுதித் தேர்வு சித்தியடைந்து ஓர் வியாபார நிறுவனம்/கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் / கணக்கு ஆய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்திலான (2) இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் இடைநிலைத் தேர்வில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் / கணக்கு ஆய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் நான்கு (4) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

   அல்லது

   (இ) கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. உயர்தரம் சான்றிதழ் பரீட்சையில், கணக்கியல் பாடம் உட்பட மூன்று (3) பாடங்களில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் ஆறு (6) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.
3. வேதனம்:
   ரூபா 1005 — ரூபா 1705/-
   40 X 5 — 50 X 10
   (அத்துடன் கூ. வே. ஆணைக்குழு சட்டப்படி இதர படிகளும் வழங்கப்படும்.)
4. விண்ணப்ப முடிவு திகதி:
   1994 — 11 — 15 ஆம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் விண்ணப்பப் பத்திரத்தை பதிவுத் தபால் மூலம் 1994 - 11 – 15 ஆம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''பொது முகாமையாளர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம், பளை'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலும் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''கணக்காளர் 104/10'' பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.ச.
பளை.
[சி-9450]

அச்சகத்துறைக்கு எமது பங்களிப்பு

11 - 12 – 18 – 24 – 36 பொயின்ற்ஸ் எழுத்துக்களை
உங்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ள
நாடுங்கள்:

புதிய வர்த்தக அச்சகம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[சி-9555]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நீதியும் அநீதியும் மோதுமா?

இப்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கை நீக்க வேண்டும். இல்லையேல் ஐக்கிய தேசியக் கட்சியினர் வீதிகளில் இறங்கி ஊரடங்கை மீறுவர் — இவ்வாறு குண்டுவெடிப்பில் கொலையுண்டகாமினி திஸாநாயக்காவின் மைத்துனரும் ஐ.தே.க. பிரமுகருமான கலாநிதி விமல் விக்கிரமசூரியா பகிரங்கமாக எச்சரித்திருக்கிறார்.

அந்த எச்சரிக்கைக்குப் பதிலடி கொடுப்பது போல, பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, "எவர் எச்சரித்தாலும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படமாட்டாது. ஊரடங்குச் சட்டத்தை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்துள்ளார்.

காமினி திஸாநாயக்காவின் இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை கொழும்பில் நடக்கவுள்ளன. அதற்கு முன், தென்பகுதியின் தூர இடங்களில் இருந்து வந்தும் பொது மக்கள் அவரது பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்த விரும்புவர். இரவு நேர ஊரடங்கே அமுல் செய்யப்பட்ட போதிலும், தொலைவிடங்களைச் சேர்ந்த பொது மக்கள் தமது இறுதி மரியாதையைச் செலுத்துவதற்கு அது தடையாக உள்ளது. ஆகையால் ஊரடங்கைப் பூரணமாக நீக்கிவிட வேண்டும் என்பது ஐ.தே.கவினரின் வாதம் — நிலைப்பாடு.

அவர்களின் நிலைப்பாட்டுக்கும் ஒரு காரணம் உண்டு. காமினியின் மரணத்தை மூலதனமாக வைத்து — மரணத்தால் உண்டான அனுதாபத்தைப் பயன்படுத்தி — எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வென்றுவிட ஐ.தே.கவினர் முடிவு செய்துள்ளனர்.

காமினியின் கொலையால் உண்டாகும் அனுதாப அலையைப் பயன்படுத்தி, ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்கென்றே ஜனாதிபதி வேட்பாளராக நிருமித் திஸாநாயக்கா தெரிவு செய்யப்பட்டார் என்பதனை, கட்சியின் பதில் பொதுச் செயலாளர் தலதா விமலசேனா பி.பி. எலி. செவ்வியில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

எனவே, காமினியின் பூதவுடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதற்கு ஊரடங்குச் சட்டம் குந்தகம் விளைவிப்பதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தலைவர்களின் மரணத்தில் அரசியல் ஆதாயம்தேட முயல்வது இலங்கை அரசியலுக்கு ஒன்றும் புதியது அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சியினர் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவதிலும், குழப்பத்தை, கலவரத்தைத் தூண்டி விடுவதிலும் மகா கெட்டிக்காரர்கள். கடந்த பதினேழு வருட தொடர் ஆட்சியில் அவர்கள் சாதனை புரிந்தது அத்துறையில் தானே!

எனவே, இரவு நேர ஊரடங்கு நீக்கப்படாவிட்டால், ஐ.தே.கவினர் வீதிகளில் இறங்குவர்; வன்செயல்களையும், குழப்பங்களையும் தூண்டுவர் என்பதனை நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அவ்வேளை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் முயலும்போது, குழப்பக்காரர்களை கலைப்பதற்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிடலாம். அதில் சிலர் இறக்கவும் கூடும்.

அவ்வாறு நிகழின் அரசின் நற்பெயரைக் கெடுத்து ஐ.தே.கட்சிக்கு மேலும் வாக்குகளைச் சேர்க்க வாய்ப்பு உண்டு. இதனை மனதில் வைத்தே ஊரடங்கை மீறும் வீதிப் போராட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டிருக்கவும் கூடும்!

வன்செயல்களில் ஊறித் திளைத்தவர்களுக்கு அவை லாபம் தரும் செயற்பாடுகளே. அரசாங்கமோ வன்செயல்களுக்கு இடங்கொடுக்க முடியாது. இது விடயத்தில் அரசு உறுதியாக இருந்தால்தான் அரசுக்கு லாபமும், நற்பெயரும் கிடைக்கும்.

எனவே தெற்கில் வன்செயல்களுக்கும் சட்டம் ஒழுங்குக்கும் இடையே இந்த இரண்டு நாள்களில் பெரும் மோதல் ஏற்படுவதைக் காணக் கூடியதாக இருக்கும்! நீதியும் அநீதியும் மோதிக்கொள்ளும்!!

★சீரற்ற காலநிலை★இரவுநேர திசையறி கருவிஇல்லை

ஹெலி ஓட்டி பின்வாங்கிய போதும் காமினி விடாப்பிடியாக புறப்பட்டார்!

அவரது கடைசிப் பயணம் கிராண்ட்பாஸில் முடிந்தது

கொழும்பு, ஒக்.29

"மழை, புயல் காரணமாக சீரற்ற காலநிலை நிலவுகிறது. எனவே இப்போது ஹெலியில் செல்ல முடியாது. இரவுநேர திசையறி கருவியும் இல்லை என்று ஹெலி ஓட்டி மறுத்த போதும்—

எப்படியாவது நான் தொட்டலங்கை (கிராண்ட் பாஸ்) கூட்டத்துக்குச் செல்ல வேண்டும். அது மிக முக்கியமான கூட்டம், எது நடந்தாலும் நீ ஹெலியை ஓட்டு என்று காமினி திஸாநாயக்கா தனது விமான ஓட்டியிடம் கூறினார்.

குண்டு வெடிப்பில் கொல்லப்படுவதற்கு முன்னர் தும்மலகூரியவில் நடைபெற்ற கூட்டத்தில் காமினி திஸாநாயக்காகலந்து கொண்டார் பின்னர்அங்கிருந்து கிராண்ட் பாஸ்கூட்டத்துக்கு ஹெலியில் புறப்பட்டார் அவ்வேளை தனது ஹெலி ஓட்டியை காமினி அவசரப்படுத்தினார்.

காமினியுடன் ஒன்றாக அதே ஹெலியில் சென்ற முன்னாள் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சரும், முன்னாள் எம். பியுமானஏ. எச். எம். அஸ்வர்இத் தகவலைத்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

காமினி கொல்லப்பட்ட தினமான 23 ஆம் திகதி ஞாயிறு காலை காலிமுகத்திடல் விமானப் படை மைதானத்தில் இருந்து அவரது பயணம் ஆரம்பமானது.

முதலில் அவர் கண்டி அஸ்கிரிய விகாரைக்குச் சென்றார். பின்னர் தலாத்துஓயாவிலும், பூஜாபிட்டியிலும் நடந்த கூட்டங்களில் உரையாற்றி விட்டு தமது தங்கொல்லை வீட்டில் மதிய உணவு அருந்தினார்.

அதன் பின்னர்— இறுதிப் பயணமாக— ஹிரியால தேர்தல் தொகுதியில் கொகரல்லையிலும், பிங்கிரிய தேர்தல் தொகுதியில் உள்ள தும்மலகூரியவிலும் உரையாற்றப் புறப்பட்டார்.

தும்மலகூரியவுக்குச் செல்லும் போது மாலை 5.45 மணி. அங்கு நடந்த கூட்டம் மாலை 6.45 மணியளவில் முடிவடைந்தது. அங்கிருந்து கிராண்ட் பாஸ் கூட்டத்துக்கு வருவதற்காக ஹெலியில் அவர் ஏறிய போது "இப்போது எப்படிச் செல்வது. விமானப் பாதை சீராக இல்லை" என ரஷ்ய நாட்டவரான அவரது விமான ஓட்டி கூறினார்.

அதற்கு காமினி அவரைப் பார்த்து— "என்ன நடந்தாலும் நான் அங்குசெல்லத்தான் வேண்டும். அங்கு எனக்காகக் காத்திருப்பார்கள். நீ ஹெலிக் கொப்டரைச் செலுத்தத் தான் வேண்டும்" என்று கூறினார்.

அந்நேரம் ஹெலி ஓட்டி அருகில் இருந்த பொலீஸ் நிலையத்துக்குச் சென்று பெற்றுக் கொண்ட தகவலின்படி கரையோரம் நோக்கி ஹெலியைச் செலுத்தினால் கொழும்பை அடையலாம் என்று விமானக்கட்டுப்பாட்டு நிலையம் அவருக்கு அனுமதி வழங்கியிருந்தது. அதன் படி இரவு 7—30 மணிக்கு கொழும்பை நோக்கிப் பயணம் ஆரம்பமானது.

மீண்டும் இரவு 8-45 மணிக்கு அந்த ஹெலி காலிமுகத்திடல் விமானப் படைத் தளத்தை அடைந்தது.

அங்கு வந்து இறங்கிய காமினி திஸநாயக்கா ஜீ. எம். பிரேமச்சந்திரவைத் தனது காரில் ஏற்றிக்கொண்டு ஒரு முறை கொள்ளுப்பிட்டியில் உள்ள தனது வீட்டுக்குப் போய் வருவதாகவும்—கண்டி மாவட்ட எம்.பி ஏ,ஆர். எம். ஏ. காதரையும் என்னையும் கிராண்ட்பாஸுக்குச் செல்லுமாறும் கூறினார்.

பின்னர் நாம் இருவரும் கிராண்ட்பாஸுக்கு செல்லும் வழியில் காதரின் இல்லத்தில் தேநீர் அருந்தினோம். நாம் இருவரும் களைப்படைந்திருந்ததால் நாம் கிராண்ட் பாஸ் கூட்டத்துக்குச் செல்லத் தேவையில்லை என்று காதர் என்னிடம் கூறினார்.

நாம் எப்படியும் போகத் தான் வேண்டும் என்று கூறிய நான் அவரது ஜீப்பில் புறப்பட்டேன்.

கிராண்ட்பாஸ் செல்லும் வழியில் ஏ. ஜே. முஸம்மில் வீட்டுக்குச் சென்றேன். அவரது வீட்டில் கதைத்துவிட்டு வெளியே வந்து பார்த்த போது நான் வந்த ஜீப் திரும்பிப் போய் விட்டது. என்னை அங்கு கொண்டு வந்து விடுவது மட்டும் தான் என நினைத்த சாரதி ஜீப்பை கொண்டு சென்று விட்டார். இதனால் எனது பயணம் தடைப்பட்டது.

இவ்வாறு அஸ்வர் தெரிவித்தார்.

நான் அந்தக் கூட்டத்துக்குப் போயிருந்தால் நிச்சயம் கொல்லப் பட்டிருப்பேன். இறைவன் என்னை காப்பாற்றினான். அன்றைய தினம் காமினி என்றுமில்லாதவாறு எம்முடன் நகைச்சுவையாக உரையாடினார். நாம் அனைவரும் வயிறு குலுங்கச் சிரித்தவாறு பயணம் செய்தோம் என்றும் ஏ. எச். எம். அஸ்வர் மேலும் கூறினார். (ஐ)

மீண்டும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் பேரவா மதிக்கப்படவேண்டும் என்றும்— இச் செயலணி கேட்டுள்ளது.

சமாதானச் சிறப்புச் செயலணி கொழும்பில் இம்மாதம் 23 ஆம் திகதிமுதல் 25 ஆம் திகதிவரை தேசிய சமாதான மாநாடு ஒன்றை நடத்தியது.

இச் செயலணியின் ஆதரவில் ஹைட்பார்க் சந்தியிலிருந்து விகாரமகாதேவி பூங்கா வரை கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணவேண்டும் என்று கோரி பாதயாத்திரை நடைபெற்றது.

பாதயாத்திரையைத் தொடர்ந்து அன்று பி.ப. 3.30 மணிக்கு விகாரமகாதேவி திறந்தவெளி அரங்கில் மூன்று நாள் மாநாட்டின் ஆரம்ப வைபவம் நடைபெற்றது.

30 க்கும் மேற்பட்ட வெளிநாட்டுத் தூதுவர்களும், வெளிநாடுகளின் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்த மூன்று நாள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இம் மாநாட்டுக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன், கலாநிதி எஸ்.கே.சண்முகநாதன் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

விகாரமகாதேவி திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற மாநாட்டு ஆரம்ப வைபவத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் உரை நிகழ்த்தினார்.

இந்த மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:—

இந்த வேளையில் சமாதான நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற தடங்கல்கள் நாட்டு மக்களை மீண்டும் பழைய முட்டுக்கட்டை நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும் —

யுத்தத்தின் மாற்றமுடியாத தத்துவங்களுக்கும் அழிவுகளுக்கும் சீர்கேடுகளுக்கும் அது காரணமாக அமைந்துவிடும்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-எ)

மாவட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதும்.

அன்றைய தினம் இரவு கராட்டி கண்காட்சி, கபடி தாச்சிப் போட்டிகள், மல்யுத்த இறுதிப் போட்டிகள், குத்துச் சண்டைப் போட்டிகள் ஆகியன தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன.

இப்போட்டிகளை ஒட்டி நாளை மறுதினம் பிற்பகல் 2.00 மணி முதல் நடைபெறும் நிறைவுநாள் நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கே. கரிகாலன், பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக தமிழீழ மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப்பும், சிறப்பு விருந்தினராக யாழ். வர்த்தக சங்கத் தலைவர் திரு. வே. சிற்சபேசன், கலைஞர் லெ. ஜெகநாதரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த விளையாட்டு விழாவை ஒட்டி கோழிச் சண்டைப்போட்டி மற்றும் கபடி, தாச்சி, மல்யுத்தம், குத்துச் சண்டை ஆகியவற்றில் பங்கு பற்ற விரும்புவோர் இன்று கோண்டாவில் மாவட்ட அரசியல் செயலகத்தில் உள்ள விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் பணிமனையிலும், நாளையும், நாளை மறுதினமும் மைதானத்திலும் பதிவு செயது கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

(உ)

காமினி வரமுன்னரே காத்திருந்த கொலையாளி

கொழும்பு,ஒக். 28

காமினி திஸநாயக்கா கிராண்ட்பாஸ் கூட்டத்துக்கு வருவதற்கு நான்கு மணித்தியாலங்களுக்கு முன்னரே கொலையாளி கூட்டமைதானத்தில் போடப்பட்டிருந்த பார்வையாளர் பகுதி ஆசனங்களில் மூன்றாவது வரிசையில் அமர்ந்திருந்தாராம். புலன் விசாரணைகளில் இத்தகவலை வெளியான கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

காமினி திஸநாயக்கா கூட்டமேடையில் அமர்ந்திருந்த ஆசனத்துக்கு நேர் எதிரேயே கொலையாளியும் அமர்ந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டை வெடிக்கவைப்பதற்கு முன்னர் கொலையாளி தனது வாயில் சயினைட் வில்லையைத் தயார் நிலையில் வைத்திருந்திருக்க வேண்டும் என்றும்—

எவர் கண்ணிலும் தான் உடலில் பொருத்தியிருந்த குண்டு தென்படாதவாறு கச்சிதமான முறையில் அவர் ஆடையணிந்திருக்க வேண்டும் என்றும்—

அதற்காக கொலையாளி தலைமயிரைப் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்று விசாரணையாளர்கள் நம்புவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

காமினியின் மெய்ப்பாதுகாவலர், இரகசியப்பொலீஸார், கிராண்ட்பாஸ்பொலீஸ் நிலைய அதிகாரிகள் ஆகியோரின் கண்களில் படாமல் எவ்வாறு கொலையாளி கூட்டத்தோடு கூட்டமாக அதுவும் காமினிக்கு எதிரேயிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார் என்பது குறித்து பொலீஸார் ஆச்சரியமடைந்தனர்.

(ஐ-எ)

காயமடைந்த 15 பேர் ஆபத்தான நிலையில்

கிராண்ட்பாஸ் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள 72 பேரில் பதினைந்து பேரின் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆஸ்பத்திரி வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்திகள் இவ்வாறு தெரிவித்தன.

கொழும்பு மாவட்ட எம்.பியான ஒஸி அபயகுணசேகராவும் அவர்களில் ஒருவர் ஆவார். அவருக்கு தலையில் ஏற்பட்ட காயங்களால் இரத்தம் உறைந்து விட்டதை அடுத்தே இரண்டு சத்திரசிகிச்சைகள் தலையில் அவசரமாக மேற்கொள்ளப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-எ)

மிரட்டலைத் தொடர்ந்து ரணிலுக்கு தீவிர பாதுகாப்பு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பை அரசாங்கம் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதற்காக நடத்த ஐ.தே.க செயற்குழுக்கூட்டத்துக்கு சென்ற ரணில் விக்கிரமசிங்காவை ஐ. தே. க ஆதரவாளர்கள் பலர் மிரட்டியதையும் ரணிலின் கார் மீது கற்களை எறிந்து தாக்குதல் நடத்தியதையும் அடுத்து அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ரணிலை மிரட்டிய சம்பவம் குறித்து அவரது பிரதம பாதுகாப்பு அதிகாரியே மிரிஹானைப் பொலீஸில் முறையீடு செய்தார். (ஐ-எ)

சிறிமா திஸாநாயக்க நியமனம்:

மூவர் கொண்ட குழுவே இறுதி முடிவை எடுத்தது

கொழும்பு, ஒக். 28

படுகொலை யுண்ட ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்காவின் இடத்துக்கு யாரை நியமிப்பது என்ற இறுதி முடிவை மூன்று பேர் கொண்ட குழுவே எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஏ.எல்.எஸ். ஹமீத், முன்னாள் சபாநாயகர் எம். எச்.முஹம்மது மற்றும் ஐ.தே.க பொதுச்செயலாளர் தஹம் விமலசேன ஆகியோரே அக்குழுவில் இடம்பெற்றனர்.

புதிய வேட்பாளராக மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமா, படுகொலையுண்ட காமினியின் மனைவி சிறிமா திஸாநாயகா மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரின் பெயர்களே பிரேரிக்கப்பட்டன. எனினும் சிறிமா திஸாநாயக்காவுக்கும் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் ஐ.தே.க நிர்வாகக் குழுவில் சமமான ஆதரவு கிடைக்கவே, இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு முன் கூறப்பட்ட மூவர் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அக்குழு [illegible] தீர்மானித்தது.

(ஐ-எ)

இன்றைய கலந்துரையாடல்

தமிழிழ நிர்வாக சேவையினால் இன்று நடத்தப்பட உள்ள விசேட கலந்துரையாடல்கள் வருமாறு:—

★ மதுவரித் திணைக்களம், விலைமதிப்பீட்டுத் திணைக்களம், வருமானவரித் திணைக்களம், நீர்வள சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம், சீநோர் கூட்டுத்தாபனம், தொழில் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல்யாழ். நாவலர் மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு.

★ ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலக ஊழியர்களுக்கான கலந்துரையாடல் காலை 10.00மணிக்கு வேலணை பிரதேச செயலகத்தில்.

★ வங்கி ஊழியர்களுக்கும் மரக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் முற்பகல். 11.30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில்.

★ சாவகச்சேரி கோட்ட பாடசாலைகள் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பகல் 1.00 மணிக்கு டிறிபேக் கல்லூரியில்.

★ கொடிகாமம் கோட்ட பாடசாலைகள் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும்.

★ தென்மராட்சி வங்கி ஊழியர்கள், சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள், பிரதேச சபை ஊழியர்கள், மாவட்ட வைத்தியசாலை ஊழியர்கள், சுகாதார சேவை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில். (ஒ)

மலையக வாக்குகளில் 65 வீதம் சந்திரிகாவுக்கே!

செல்லச்சாமி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 28

மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் 65 சதவீத வாக்குகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொ. ஐ. மு. வேட்பாளரான பிரதமர் சந்திரிகாவுக்கே கிடைக்கும்.

இ. தே. தொ. கா தலைவர் திரு. எம். எஸ். செல்லச்சாமி முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

கடந்த பொதுத்தேர்தலின் போது இ. தொ. கா தலைவர் தொண்டமான் தம்மிடம் ஐந்து லட்சம் வாக்குகள் இருப்பதாகத் தம்பட்டம் அடித்தார். ஆனால் அவரினால் 2 லட்சம் வாக்குகளையே பெறமுடிந்தது.

மலையக மக்கள் மத்தியில் புதிய சிந்தனை ஏற்பட்டுள்ளது.

குடியுரிமையைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சியே அதனை மீண்டும் மலையகத் தமிழருக்குக் கொடுத்தது இதில் என்ன புதினம் உண்டு?

இ. தொ. கா மீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது. இன்று மலையகத் தொழிலாளர்கள் சந்திரிகாவை ஆதரிக்க ஆரம்பித்துள்ளார்கள் இந்த நாட்டின் விடிவெள்ளி சந்திரிகா.

இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ-எ)

அரசு-புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலனை செய்ய நேரிடும்.

காமினி கொலையில் அரசு சம்பந்தப்பட்டிருந்தது என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டை நான் ஆணித்தரமாக மறுக்கின்றேன். ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்தும் விடுதலைப் புலிகளிடம் இருந்தும் எனது உயிருக்கும் ஆபத்து உண்டு.

புலிகள் இன்றி தீர்வில்லை

நாட்டில் நடக்கும் 11 வருடகால உள் நாட்டுப்போருக்கு விடுதலைப் புலிகள் இன்றித் தீர்வுகாண முடியும் என்று நினைப்பது முட்டாள் தனமாகும்.

எனினும் விடுதலைப் புலிகளுடன் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் இறங்குவது பிரச்சினையை வாங்குவது போல் இருக்கும்.

நிலைமை உணர்ச்சி மயமானதாக உள்ளது. இந்நிலைமை ஐ. தே. கட்சி ஆதரவாளர்களினால் மோசமாக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு பணம் கொடுத்தேனா?

காமினியைக் கொல்வதற்கு எனது அரசு புலிப்படையினருக்கு பணம் கொடுத்ததாக ஐ. தே. கவின் ஆதரவாளர்கள் நாடெங்கும் கையினால் எழுதப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர்.

நிலைமையில் அமைதி ஏற்படும் வரை பேச்சுகளை ஒத்திப்போடுவது பொறுப்புள்ள ஓர் அரசின் செயலாகும்.

பேச்சுவார்த்தைகள் ஒத்திப்போடப்பட்டாலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகளின் கட்டமைப்பை சீரமைக்கும் முயற்சிகள் தொடரும்.

வன்முறை கலாசாரம்

வன்முறைகளற்ற சமுதாயத்தைகட்டி எழுப்ப நான் முயற்சித்தும் கூட வன்முறை தொடருவது கவலை தருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒரு வன்முறைக் கலாசாரம் உண்டு. அந்த வகையில் ஐ. தே. கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் ஒற்றுமை உண்டு. இருவருமே அரசியல் ஆதாயங்களுக்காக அரசியல் கொலைகளில் ஈடுபட்டது தெரிந்ததே—

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நாம் ஆரம்பித்தது உண்மை. ஆனால் அவர்களின் செயல்களை மூடி மறைக்கவில்லை: பூசி மெழுகவில்லை விடுதலைப்புலிகளுக்கு வெள்ளையடிக்க நான் தயாரில்லை.

விடுதலைப்புலிகள் கொலைகள் செய்வது முழு உலகுக்குமே தெரியும். சொந்தத் தமிழ் மக்களையும் தமிழ்த் தலைவர்களையும் கொன்றிருக்கிறார்கள்.

ஆனால் விடுதலைப்புலிகள் இப்போது சமாதானத்தை ஏற்கத் தயாராக இருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம்.

ஆகவே இக்கொலைக்கு அவர்கள்தான் பொறுப்பு என்பது நிரூபிக்கப்படும்வரை அவர்கள்தான் குற்றவாளிகள் என நாம் தீர்மானிக்கப் போவதில்லை — பிரதமர் தமது பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார். [அ-எ-4]

பூசித்தடுப்பு மருந்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 28

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுப் பகுதி மக்களுக்கு இன்று காலை அங்குள்ள அரசினர் வைத்தியசாலையில் வைத்து பூசித்தடுப்பு மருந்து இலவசமாக வழங்கப்படும்.

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் நடக்கும் இச் சிகிச்சையை பருத்தித்துறை றோட்டறக்ட் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

மலையகத் தொழிலாளர் விருது

இலங்கைப் பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸுக்கு சர்வதேச பத்திரிகைச் சுதந்திர விருது கிடைக்க உள்ளது.

அமெரிக்காவில் இயங்கும் பத்திரிகையாளரைப் பாதுகாப்பதற்கான குழு வழங்கும் இந்த விருதைப் பெறும் முதலாவது தெற்காசியப் பத்திரிகையாளர் ஜனாப் அத்தாஸ் ஆவார்.

இந்த விருது இந்த வருடம் உலகெங்கும் உள்ள எட்டு பத்திரிகையாளருக்கு வழங்கப்படுகிறது.

அத்தாஸுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கொலைப் பயமுறுத்தல் இருந்த போதிலும் அவர் இராணுவத்தினரது தோல்வியை வெளிக்காட்டிக் கட்டுரை எழுதியிருந்தார்— என்று விருது வழங்கும் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

"சன்", "சண்டே டைம்ஸ்" பத்திரிகைகளில் பணிபுரிந்த இக்பால் அத்தாஸ் இப்போது "சண்டே லீடர்" பத்திரிகையின் இணை ஆசிரியராகப் பதவி வகிக்கிறார்.

புலிகளின் குரல் வானொலியில்

28 — 10 — 1994
வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி— நூல் அறிமுகம்.அறிமுகமாவது "கரமி" சஞ்சிகை. சிறுகதை— தமிழ்க்கவி எழுதிய "சரித்திரம் காத்திருக்கின்றது". கவிதை— கவிதா எழுதிய "போர்ப்பரணி பாடி வரும் பொன்மறவர் நினைவுகள்"
★ 8-25 — கணப்பொழுது —சி.கண்ணம்மா எழுதிய "கப்டன் டோறா"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம்—வே. பாலகுமாரன் எழுதிய "பிரியும் விளிம்பில் இன்னொரு தேசம்"
★ 8-50 — மீனவர் விடுவிப்பு நிகழ்வுகளின் தொகுப்பு தொகுத்து வழங்குபவர் சத்யா

29 — 10 — 1994
சனி காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7 30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராண்ட்பாஸில் ஐ.தே.க. கூட்டம் நடந்த இடத்தில் குண்டு வெடித்த பின்னர் எடுக்கப்பட்ட படம். கூட்ட மேடையும் படத்தில் காணப்படுகிறது. (ஒ)

யாழ். ஆஸ்பத்திரி கிருமி நீக்கும் பிரிவு முற்றாகச் செயலிழக்கும் ஆபத்து!

யாழ். ஆஸ்பத்திரியின் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் கிருமி நீக்கும் பிரிவு முற்றாகச் செயலிழக்கும் நிலை உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு தொற்று நீக்கும் கருவிகளுடன்இப்பிரிவு நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்தது. படிப்படியாக அந்தக் கருவிகள் பழுதடைந்ததைத் தொடர்ந்து தற்சமயம் ஒரு கருவியே செயற்பட்டு வருகிறது. அதுவும் அடிக்கடி செயலிழப்பதால் தொற்று நீக்கும் பிரிவு ஸ்தம்பிதம் அடைந்து வருகிறது.

தொற்று நீக்கும் பிரிவின் செயற்பாடு பாதிக்கப்பட்டிருப்பதால் அத்தியாவசிய சேவையான சத்திரசிகிச்சைகள் தாமதமடைந்து வருகின்றன.

சத்திரசிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் உபகரணங்கள், துணிவகைகள் மற்றும் உடைகள் அனைத்தும் உடனுக்குடன் இந்தப் பிரிவில் தொற்று நீக்கப்படுகின்றன.

தற்போது இந்த வேலைகள் தாமதமடைவதால் சத்திர சிகிச்சைப் பிரிவில் டாக்டர்கள் காத்திருக்க வேண்டி ஏற்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியின்இந்த நிலைமை குறித்து ஆஸ்பத்திரி நிர்வாகம் பல தடவைகள் மேலிடத்துடன் தொடர்பு கொண்ட போதிலும் உரிய பயன்எதுவும் ஏற்படவில்லை (அ-15)

மரண அறிவித்தல்கள்

அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை

குருநகரைச் சேர்ந்த அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை 27-10-94 வியாழக்கிழமை காலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற அகஸ்ரின் - அன்னக்குட்டி தம்பதியரின் ஏகபுதல்வனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், பிரான்சிஸ் [ரயில் நிலையம் திருகோணமலை], மரியதாஸ் [அரச மரக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்], சூசைதாஸன் [பிரான்ஸ்], கிறிஸ்தோப்பர் [சென். யோசப் வித்தியாலயம்], வோல்டர் [ஜேர்மனி], அகஸ்ரின் [பரியோவான் கல்லூரி], இம்மானுவேல் [ஜேர்மனி], அன்ரனிற்றா ஆகியோரது அருமைத் தந்தையும், பிரபாவதி [ஆனைக்கோட்டை], ஸ்ரூர்த்து நாயகி, றோஸ்மேரி, மேரிடெய்சி [சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்], ஸ்ரெரிபி [ஜேர்மனி], கிறுசன்யா, அன்ரனி [சண்முகநாதன் வித்தியாசாலை - அரியாலை] ஆகியோரின் அன்பு மாமனாரும், புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களான ம. டிலூக்ஷன், கு. ஸ்ரனிஸ்றூபன், ம. வேட்கட்சன், கு. ஜெனிக்காட்றீகன், பரியோவான் கல்லூரி மாணவர்கள் அ. அடம்ஸ்மித், அ. கிறிசாந், டி. றெனோஜன், ம. மக்சன், திருக்குடும்ப கன்னியர்மடம் - ஆங்கில பாடசாலை மாணவிகள் ம. லக்சினி, கு. தர்சினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி பி. றெமிஜியா மற்றும் றீ. றெஜினோல்ட், கு. அனுஷியா, ஜஸ்மின், அ. தனுஷா, அ. தீபிகா, கி. பிரபாவினி ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அ. மரியதாஸ்
[மகன்]

117/2, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். [சி 9556]

திருமதி பிரீடா ஸ்ரீபன்ஸ்

திருமதி பிரீடா ஸ்ரீபன்ஸ் அவர்கள் 22-10-94 அன்று காலமானார். இவர் ஜோர்ஜ் ஸ்ரீபன்ஸ் (Rtd. S.L.A.S) அவர்களின் அன்பு மனைவியும், ஐவர் (U.K) எரிக் (Cecil Arsecule Ratne & Co, Chartered Accountants, Colombo), காலஞ்சென்ற ஜயந்தி டேவிற், விமலாந்தி வில்சன் (U.K), ரெவோ (U.K), பீலிக்ஸ் (U.K) ஆகியோரின் தாயாரும் எஸ்தர், றெஜீனா, டேவிற், வில்சன், உஷா, கௌசி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அடக்க ஆராதனை இன்று (28-10-94) வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெறும் என்பதை யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
ஜோர்ஜ் ஸ்ரீபன்ஸ்
(கணவர்)
எரிக் ஸ்ரீபன்ஸ்
(மகன்)

வெ்லேன்,
உடுவில். (33541)

செல்வி சாரதாதேவி சோமசுந்தரம்

(யாழ். மாநகரசபை)

நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், நாயன்மார் வீதியை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவரும், யாழ். மாநகர சபை சுருக்கெழுத்தாளருமான செல்வி சாரதாதேவி சோமசுந்தரம் 27-10-1994 நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் சோமசுந்தரம், காலஞ்சென்ற மைலாம்பிகை தம்பதிகளின் புத்திரியும், கனகாம்பிகை (ஆசிரியை கொழும்பு இந்து கல்லூரி), அமரர் நடராஜா (ஆசிரியர்), மோகனதாஸ் (கனடா), சுசிலாதேவி (பாடசாலை வைத்திய அதிகாரி அலுவலகம் யாழ்.) குகனேசம்மா, இராஜேவி (ஆசிரியர் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), மதசாழினி, இலாகரி, பிரபாகரி, மாலதி, வன்மீகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியம், நீதிராஜா, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28-10-94 பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சோமசுந்தரம் (ஆசிரியர்)
[கணவர்]

107, நாயன்மார் வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம். (33551)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-10 [illegible] அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அரிவிருத்திக் குழு நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட ரீதியான 15 வயது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் போட்டிகள் பிற்பகல் 2.15 மணிக்கு ஆரம்பமாகும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் வேலாயுதம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயமும் —

கரணவாய் பொன்னம்பலம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து சிதம்பராக் கல்லூரியும் —

வல்வை சிவகுரு வித்தியாலயத்தை எதிர்த்து ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் மோதுகின்றன.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் ஸ்கந்தவரோதயக்கல்லூரியை எதிர்த்து புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயமும் —

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தை எதிர்த்து முத்துத்தம்பி மகாவித்தியாலயமும்—

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை எதிர்த்து இணுவில் மத்தியகல்லூரியும் மோதுகின்றன. (இ-4-20)

தாழமுக்கம் தொடர்கிறது

கொழும்பு, ஒக். 28

இலங்கையின் கிழக்குக் கரைக்கு அருகே தோன்றிய தாழமுக்கம் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதாக வழிமண்டல திணைக்களம் நேற்று மாலை அறிவித்தது.

நாட்டில் பல பாகங்களில் பரவலான மழை அல்லது இடியுடன் கூடிய மழை குறிப்பாக இன்று (வெள்ளி) பிற்பகலில் அல்லது மாலையில் பெய்யும் என்றும் வழிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-எ)

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் பலியான மூவரின் சடலங்கள். (ஒ)

யாழ். மத்திய கல்லூரியின்
உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம்: பிற்பகல் 3-00க்கு
பொ. தங்கராஜா ஆதரவில்
UNION COLLEGE 'S J/CENTRAL
(33549)

மலிவு விற்பனை வாரம்
24-10-1994 - 30-10-1994

★ கேர் (f) போம் பிறசியர்ஸ்
★ சில்வர் சீல்ட் சொக்ஸ் வகைகள்
★ பெனியன்கள் ★ தையல் நூல் வகைகள்
★ எலாஸ்டிக் வகைகள் ★ யட்டிகள்
மற்றும் புடைவை வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
★ சிறி முருகன் ★
303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
(33433)

தீபாவளி
மலிவு விற்பனை
* கஸியோ (Casio)
* சிற்றிசன் (Citizen)
கைக் கடிகாரங்கள்!
மலிவு விற்பனை!!
01-11-1994 வரை
★ அல்டி ★
269/1, மின்சார நிலையவீதி
[illegible]
(33448)

குண்டு வெடிப்புக்குச் சற்று முன்னர் கிராண்ட்பாஸ் கூட்ட மேடையில் காமினி திஸாநாயக்கா அமர்ந்திருப்பதையும், அவருடன் பலியான முன்னாள் அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி உரையாடிக் கொண்டிருப்பதையும், இடதுபக்கம் உயிரிழந்த கிறிஸ்ரி பெரேராவையும் காணலாம். (ஒ)

ஐ. தே. க. ஆட்சியில் சித்திரவதைக்கு உள்ளான

தமிழ் இளைஞர் ஒருவருக்கு புகலிடம் கொடுத்து உதவிய சுவிஸ் தூதர்

பிரியாவிடை உரையில் அவரே தகவல்

கொழும்பு, ஒக். 28

கொழும்பில் பணிபுரிந்த சுவிஸ் தூதர் திரு. அந்த்ரே வொன் கிராபன்ரீட், ஐ. தே. க. அரசின் காலத்தில் அரசுப் படையினரால் கடுமையான முறையில் சித்திரவதை செய்யப்பட்ட ஒரு தமிழ் இளைஞரை சுவிஸுக்கு அனுப்பி, புகலிடம் பெற்றுக் கொடுத்த தகவல் கடந்த வாரம் வெளியாகியது.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அளித்த பிரியாவிடை விருந்தில் பேசிய போது, சுவிஸ் தூதர் கிராபன்ரீடே இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

26-04-94 செவ்வாய் அன்று அதிகாலை 4 மணியளவில் 24 வயது நிரம்பிய ஜூட் என்ற பெயருடைய தமிழ் மாணவனை நான் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு கூட்டிச் சென்று எயர் லங்கா விமான மூலம் சுவிஸுக்கு அனுப்பினேன். அங்கு அவருக்கு புகலிடம் வழங்கப்பட்டது

நான் பேசுகின்ற (தாஜ் சமுத்ரா ஹோட்டல்) இடத்தில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள கோல்பேஸ் ஹோட்டலுக்கு நேர் பின்னால் இருந்த இரகசியத் தடுப்பு நிலையம் ஒன்றில் அந்த தமிழ் இளைஞர் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

1993 டிசம்பரில் படையினரால் கைது செய்யப்பட்ட ஜூட் அத் தடுப்பு நிலையத்தில் கடுமையாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்.

நான் கடந்த மே மாசத்திலும், ஓகஸ்டிலும் சுவிஸ் சென்றிருந்த போது ஜூடை சந்தித்துப் பேசினேன்.

இலங்கையில் எனது பணியை முடித்துக் கொண்டு செல்லும் நான் அடுத்த வாரம் சுவிஸில் ஜூடைச் சந்தித்து நல்ல செய்தி ஒன்றை தெரிவிக்கவிருக்கின்றேன்.

இதுதான் நான் அவருக்கு கூறவிருக்கும் செய்தி:

அன்புள்ள ஜீட், இலங்கை நிலைவரத்தில் எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்கு முன்பு அரசுக்குழு சமாதானப் பேச்சுகளை நடத்த யாழ். சென்றது.

இது ஒரு இதயசுத்தியான நேர்மையான சமாதானத் தேடல் என்று உணரப்பட்டது.

தாக்குப் பிடிக்கக்கூடிய சமாதானத்தைக் காணும் பாதை நீண்டதும் கடினமானதுமாகும். அப் பாதையில் பின்னடைவுகளும் ஏற்படலாம். ஆனாலும் சமாதானத்துக்கான நம்பிக்கை மீண்டும் ஏற்பட்டுள்ளது.

நல்லது அன்புள்ள ஜீட், இது உங்களுக்கும் இலங்கைக்கும் உண்மையிலேயே நல்ல செய்திதானே'' —

இவ்வாறு சுவிஸ் தூதர் தமது பிரியாவிடைப் பேச்சில் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரான வீரசிங்க மல்லிமாராச்சிக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்துகிறார். (ஒ)

காமினி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருண்டையான நெருப்புப் பந்து ஒன்று பெரும் சத்தத்துடன் வெடித்தது.

கிராண்ட்பாஸில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிர்தப்பிய டாக்டர் ராஜித சேனரட்ன முன்கண்டவாறு தெரிவித்தார். (இ-ஐ)

சமாதான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படும் என்று கிண்ஸ்லே ரத்வத்த தமது பேட்டியில் மேலும் கூறினார். (ஒ-4)

நன்றி நவில்கின்றோம்

22-10-1994 இல் நீர்வேலியில் நடைபெற்ற எமது தந்தை திரு. க. சின்னராசா (ஓய்வுபெற்ற தேசிய வீடமைப்பு அரிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர்) அவர்களின் மணிவிழாவைச் சிறப்புற நடத்திய விழாக் குழுவினருக்கும், விழாவுக்கு வருகைதந்து எமது பெற்றோருக்கு ஆசிகள், வாழ்த்துக்கள், பாராட்டிதழ்கள் வழங்கி கௌரவித்தவர்களுக்கும், இன்னும் பல வகைகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள் கூறுவதில் மகிழ்வடைகிறோம்.

சி. நடனேஸ்வரன்,
சி. சிவனேஸ்வரன்,
சி. கியமணா.
(புதல்வர்கள்)

ஈஸ்வர வாசம்,
மயிலணி,
கல்லாசம். (7686)

D. M. I.
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L 95, 96
நடைபெறுகின்றன
கணக்கியல் — D. SAM
வர்த்தகம் — பசில்
பொருளியல் — இராஜேஸ்வரன்
அளவையியல் — சோதிலிங்கன்
★ மாணவர்களின் பாடத் தெரிவுக்கு முன்னுரிமை அளிக்கும் கல்வி நிறுவனம்.
(33548)

கண்ணீர் அஞ்சலி

மண்டைதீவு இருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய அறங்காவலரும், அல்லைப்பிட்டி உப-தபாலதிபரும், மண்டைதீவு இருமுறைக் கழகப் போசகரும், கழகத்தின் வளர்ச்சிக்கு அருமபணியாற்றியவருமான

அமரர். சி. இரட்ணசபாபதி (ஜே. பி.)

அவர்களின் மறைவையிட்டு எமது நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

திருமுறைக்கழகம்,
மண்டைதீவு.
(33550)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org